# கோடை உலா - 2009

டென்னிசித் தமிழ்ச் சங்கத்தின் கோடை உலா (summer picnic) கடந்த ஆகஸ்ட் 29 ஆம் நாள் நேஷ்வில் வார்னர் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது . வந்திருந்த அனைவருக்கும் பீட்சா, வடை, பஜ்ஜி, சுட்டகோழி போன்ற உணவுகளும், பானங்களும் வழங்கப்பட்டன. நிகழ்வின் போது அனைவரையும் உற்சாகப்படுத்தும் வகையில் இடையிடையே புதிய தமிழ்த் திரையிசைப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தது.

இதில் வளர்ந்தவர்களுக்கும், சிறுவர்களுக்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. சிறுவர்களுக்கான போட்டிகளை திருமதி உமா நாராயணன், திருமதி பிரீத்தி தினேஷ் ஒருங்கிணைத்து ஆர்வத்துடனும் சிறப்பாகவும் நடத்தினார்கள். பல குழந்தைகள் மிகவும் ஆர்வத்தோடு இப்போட்டிகளில் பங்கேற்றார்கள். இப்போட்டிகளில் சிறப்பிடம் பெற்றது “புதையல் வேட்டை”. இதில் சிறுவர், சிறுமியர் பல குழுக்களாக புதையல் தேடும் வேட்டையில் இறங்கினார்கள். சில குழுக்கள் மிகவும் அருகில் இருந்த சிற்றோடையையும் கடந்து தேடச் சென்றார்கள். நீரோட்டம் முழங்காலுக்குக் கீழேதான் போய்க்கொண்டிருந்ததென்றாலும், ஓடையைத் தாண்டும் தைரியம் எல்லோருக்கும் வராதல்லவா? இப்போட்டியில் பங்கு பெற்ற அனைத்து சிறுவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆடவருக்கான டென்னிஸ், கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டன. டென்னிஸ் இரட்டையர்ப் போட்டி பல சுற்றுகளாக நடத்தப்பட்டு, இறுதியில் சந்திரமௌலி-தணிகை இணையர் வெற்றிவாகை சூடினர். கிரிக்கெட் போட்டியில் மூன்று அணிகள் போட்டியிட்டன. முடிவில் இராஜேஷ் தலைமையிலான நிசான் கார் நிறுவன அணி வெற்றி பெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு டென்னிசித் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செந்தில்நாதன் பரிசுகளை வழங்கினார்.

பெண்களுக்கு “யார் அந்த தமிழச்சி” என்ற நகைச்சுவையான போட்டி நடத்தப்பட்டது. போட்டியை கஜேந்திரன் மற்றும் தயாநிதி இருவரும்

சிறப்பாக நடத்தினார்கள். இதில் பல பெண்கள் மிகவும் உற்சாகமாகக் கலந்துகொண்டார்கள். அழகிப் போட்டிகளில் இருப்பது போல "பூனை நடை", சுவையான கேள்விகள் போன்றவையே இப்போட்டியின் முக்கிய அம்சங்கள். ஆனால் இது முன்னறிவிப்பு இல்லாமல் நடத்தப்பட்ட திடீர் "அழகிப் போட்டி"யாக இருந்ததால் உடனுக்குடன் பெண்கள் நடித்துக் காட்டியதும், கேள்விகளுக்கு பதிலளித்ததும் சுவாரசியமாக இருந்தது. இந்நிகழ்ச்சியின் இடையே ஆங்காங்கே கண்ணில் பட்ட பலூன், காபி போன்ற பொருட்களுக்கு தமிழ் பெயர்களை கேட்டு நடுவர்கள் போட்டியாளர்களை திணறடித்தார்கள். போட்டியில், பல கடினமான கேள்விகளுக்கும் பதிலளித்து இப்போட்டியில் வென்றவர் திருமதி சாந்தி கௌரிசங்கர். ஒப்பனை இல்லாமல் நடந்த இந்த திடீர் அழகிப் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு ஒப்பனைப் பேழை பரிசாக அளிக்கப்பட்டது சுவாரசியத்தின் உச்சகட்டம்.

சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமை தெரியாதவாறு இந்த கோடைவிழாவினை குளுகுளுவென நடத்திக் காட்டினார்கள் டென்னிசித் தமிழ்ச் சங்க நிர்வாகிகள்.